# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2472/49 - 2026 ජනවාරි මස 23 වැනි සිකුරාදා - 2026.01.23

2472/49 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/02/90.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/15/2018/VE/294.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கம்புருபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 330, கம்புருபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, கடஸ்திரல் வரைபடம் 820239, தொகுதி இல. 05, தாள் இல. 02 இல் காட்டப்பட்டுள்ள பின்வரும் காணித் துண்டுகள்.

1. **துண்டு இல. 1**

காணியின் பெயர்: ரட்டலங்காவத்தை; விபரம்: வீட்டுத்தோட்டம், சுமார் 15 - 20 வருடம் வயதான கருவாத் தோட்டம், கலப்பு பயிர்ச்செய்கை, சுமார் 20 - 25 வருடம் வயதான பலா மரங்கள் 2 உம் மற்றும் சுமார் 5 - 10 வருடம் வயதான பலா மரங்கள் 4 உம் காணப்படுகின்றன; உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு, ஹெக்டர் கொப்பே கடுவ மாவத்தை, கொழும்பு – 07; விஸ்தீரணம்: 0.2317 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: ரட்டலங்காவத்தை; விபரம்: பற்றைக்காடு; உரிமை கோருவோர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு, ஹெக்டர் கொப்பே கடுவ மாவத்தை, கொழும்பு – 07; விஸ்தீரணம்: 0.9826 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி

மு.ப. 10.00 மணிக்கு கம்புருபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

என். டீ. பீ. ரணசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கம்புருபிட்டிய.

பிரதேச செயலகம்,
கம்புருபிட்டிய,
2026, சனவரி 19.

EOG 01 - 0236

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஆ.வ.கோ. எல்லை 931 இன் துண்டிலக்கம் 10 மற்றும் துண்டிலக்கம் 22 (ஆ.வ.கோ. எல்லை 931 திருத்தியமைக்கப்பட்ட வரைபடத்தின் து. இ. 153, 154, 155) ஆகிய காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக மு.ப. 09.30 மணிக்கு தம்புள்ளை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆ.வ.கோ. எல்லை 931 இன் துண்டிலக்கம் 10 மற்றும் துண்டிலக்கம் 22 (ஆ.வ.கோ. எல்லை 931 திருத்தியமைக்கப்பட்ட வரைபடத்தின் து. இ. 153, 154, 155) : பரிசீலனை நடாத்தப்படும் திகதி : 2026.02.28

என். எம். உபேக்ஷா குமாரி,
பிரதேச செயலாளர்,
தம்புள்ளை.

பிரதேச செயலகம்,
தம்புள்ளை,
2026, சனவரி 19.

EOG 01 - 0237

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.